# இலக்கியப் புதையல்

---

**Que.1. “காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு” என்பது போல் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற்குரியதே என்னும் கருத்திற்கிணங்க தாய்மொழியின் அவசியம் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**“காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு” என்பது போல் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற்குரியதே என்னும் கருத்திற்கிணங்க தாய்மொழியின் அவசியம் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** தாய்மொழி பற்றிய விளக்கம்

முக்கியத்துவம்

மொழிநடை

**Que.2. தமிழ்மொழியின் பெருமைகளை உணர்த்தும் கவியரங்கம் பள்ளி தமிழ் மன்றம் சார்பில் நடைபெற உள்ளது. அந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராகக் கவிப்பேரரசு வைரமுத்து பங்கேற்க உள்ளார். தலைமையாசிரியர் தலைமை தாங்கும் இவ்விழாவிற்கான வரவேற்புரை தயார் செய்யுங்கள்.**

**Ans.** அமைப்பு

அறிமுகம்

மொழிநடை

**Que.3. “மற்ற மரங்களிலிருந்து காக்கை குருவிகள்**

**எச்ச மிட்டதற்குப் பிராயச்சித்தம் செய்வதற்காக**

**நீங்கள் இந்த வெள்ளை மலர்களை**

**மண்ணெல்லாம் தூவுகிறீர்களோ?”**

**- நா.காமராசன்.**

**இதுபோன்று பூமிக்கு அழகு சேர்க்கும் இயற்கை செல்வங்களை வரிசைப் படுத்துங்கள்.**

**Ans.** மரம்

செடி

பூக்கள்

மழை…..போன்வன.

**Que.4. கீழ்வரும் பகுதியைப் படித்துப் பிழை திருத்தி எழுதவும்.**

**நம் மக்கல் வாள்வே தமிழ். மொலியே மக்கலை விளங்கினின்று வேறுபடுத்துவதாகும். ஒவ்வொறுவருக்கும் அவரவர் தாய் மொழி மதிப்பிர்குரியதே.**

**Ans.** மக்கள்

மக்களை

வாழ்வே

மொழி

விலங்கு

ஒவ்வொருவருக்கும்

தாய்மொழி

மதிப்பிற்குரியதே

**Que.5. வழி – நான் நடந்து சென்ற வழி முட்கள் நிறைந்தது.**

**வலி – என் கால்கள் மிகவும் வலியாக இருந்தன.**

**இதுபோன்று கீழே தரப்பட்டிருக்கும் சொற்களுக்கு பொருள் வேறுபாடு உணர்ந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

**அ) மலை ; மலை**

**ஆ) கலை ; களை**

**Ans.** பொருத்தமான வாக்கிய அமைப்பு

**Que.6. தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே**

**தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்**

**கோடுவாய் வைம்மின் கொடுமணி**

**யியக்கும்மின்”**

**-சிலம்பு.**

**தரப்பட்டுள்ள பாடல் வரிகளில் இடம்பெறும் இசைக்கருவிகளைப் பட்டியல் இடுக.**

**Ans.** தொண்டகப்பறை

சிறுபறை

கொம்பு

**Que.7. “நீங்கள் காற்றில் ஊதும் வால் முளைத்த நட்சத்திரங்கள்**

**பூமியின் மேல் இயற்கைத்தாய் போடும்**

**கோடுகள் இல்லாத கோலப்புள்ளிகள்**

**இலைக்குளத்திலிருந்து துள்ளி விழும் மலர் மீன்கள்”**

**- நா.காமராசன்.**

**இப்பாடல் வரிகளில் உள்ள உவமைத் தொடர்களை எடுத்து எழுதுக.**

**Ans.** நீங்கள் காற்றில் ஊதும் வால் முளைத்த நட்சத்திரங்கள்

இலைக்குளத்திலிருந்து தள்ளி விழும் மலர் மீன்கள்

**Que.8. திருமாலை (விஷ்ணு) வழிபடும் நெறி வைணவம் எனப்படும். வைணவ அடியார்களை ஆழ்வார்கள் என்று அழைப்பர். ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர். இவர்கள் பாடிய நாலாயிரம் பாடல்கள் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது.**

**கேரளத்தைச் சேர்ந்த ஒரே ஆழ்வார் குலசேகர ஆழ்வார். ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண்மணி ஆண்டாள்.**

**தரப்பட்டுள்ள பகுதியை வாசித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வடை எழுதுக.**

**அ) கேரளத்தைச் சேர்ந்த ஆழ்வாரின் பெயர் எழுதுக.**

**ஆ) ஆழ்வார்களைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

**Ans.** அ) குலசேகர ஆழ்வார்

ஆ) ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர் இவர்கள் பாடிய நாலாயிரம் பாடல்கள் நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது.

**Que.9**. **அ) நிலா - அமுதபாரதி**

**ஆ) கோடை - இரா.மயில்சாமி**

**இ) துளிப்பா - மித்ரா**

**ஈ) டயரி - பழனி பரதி**

**Ans.** அ) மித்ரா

ஆ) பழனி பாரதி

இ) அமுதபாரதி

ஈ) இரா. மயில்சாமி

**Que.10**. **"எங்கு செல்லும்**

**புறாக்கள்**

**நாளை கும்பாபிஷேகம்"**

**- ப.சங்கீதா.**

**இக்கவிதை வரிகளின் மூலம் கவிஞர் சமூகத்திற்கு உணர்த்தும் செய்தியைச் சூழ்நிலையோடு தொடர்புபடுத்திக் குறிப்பாக எழுதவும். (குறிப்புகள் – மரம் வெட்டுதல், காடுகளை அழித்தல்.)**

**Ans.** குறிப்புகளுக்கு ஏற்ற விளக்கம்

மொழிநடை

**Que.11. மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இந்நூலினை மணிமேகலைப் பதிப்பகத்தார் 1980-இல் பதிப்பித்து வெளியிட்டனர். 420 பக்கங்களுடைய இதன் விலை 270 ரூபாய். இந்நூலிற்கான நூலடைவு தயார் செய்க.**

**Ans.** நூலின் பெயர்

ஆசிரியர் பெயர்

நூலின் வகை

பதிப்பகம்

பதிப்பித்த ஆண்டு

விலை

பக்கங்கள்

**Que.12. உவமைக்கவிஞர் சுரதா பிறந்த அண்டு 23.11.1921. இயவரது இயற்பெயர் இராசகோபால். சொந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர். கலைமாமணி என்ற விருதை 1972 –இல் தமிழக அரசால் இவருக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், 1990-இல் பாரதிதாசன் என்ற விருதையும் பெற்றார். நூறுக்கும் மேற்பட்ட சினிமாப் பாடல்களை எழுதியுள்ளார். கவிதை எழுதுதல்தான் இவர் தொழில். சுப்புரத்தின தாசன் என்ற புனைபெயரைக் கொண்டவர். 19.6.2006-இல் மறைந்தார்.**

**மேற்குறிப்பிட்ட வாழ்க்கைக் குறிப்பில் இருந்து சுரதாவின் தன்விவரப் பட்டியலைத் தயார் செய்க.**

**Ans.** பெயர்

பிறந்த ஆண்டு

பிறந்த இடம்

கிடைத்த விருதுகள்

தொழில்

தனிச்சிறப்பு

இறப்பு

**Que.13. “கல் பொறுக்கிப்போட்டு**

**நீர்குடிக்க வந்த காகம்**

**ஒட்டிக் கொண்டது**

**வெயிலில் உருகிய**

**பிளாஸ்டிக் குடத்தில்”**

**பழனிபாரதியின் இக்கவிதை வரிகள் உன்னுள் ஏற்படுத்திய தாக்கத்தை விமர்சனக் குறிப்பாக எழுதவும்.**

**Ans.** இயற்கை அழிவு

மழைகுறைவு

வெப்பம் அதிகரித்தல்….. இதுபோன்ற கருத்துக்கள்.

**Que.14. காலம் கொள்ளி வைத்தாலும்**

**சுவாசிக்கும்**

**சடலம்”**

**இரா.மயில்சாமியின் டயரி என்ற கவிதையை வாசித்து நாட்குறிப்பின் பயன்களைக் குறிப்பாக எழுதவும்.**

**Ans.** மறக்கமுடியாத நிகழ்ச்சி

தவறுகளைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பு

**Que.15. பன்னீர் மரங்கள் என்ற கவிதையை எழுதியவர்……………**

**அ) நா.காமராசன் ஆ) திரு. வள்ளிக்கண்ணன்**

**இ) வைரமுத்து ஈ) சுரதா**

**Ans.** அ) நா.காமராசன்

**Que.16. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**அ) யானோதேறேன் - சீவகசிந்தாமணி**

**ஆ) தெய்வம் கொள்ளுமின் - கம்பராமாயணம்**

**இ) கோடை நடை - குறுந்தொகை**

**ஈ) எழுவர் ஆனேம் – சிலப்பதிகாரம்**

**Ans.** அ) குறுந்தொகை

ஆ) சிலப்பதிகாரம்

இ) சீவகசிந்தாமணி

ஈ) கம்பராமாயணம்

**Que.17. ஜனவரி 16 ஆம் நாள் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறும் இவ்விழாவில் புதுக்கவிஞர் தாமரை கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார். இதற்கேற்ற சுவரொட்டி ஒன்று தயார் செய்க.**

**Ans.** வடிவம்

கருத்து

தெளிவு

**Que.18. கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே**

**செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்பேம் எனினே தப்புற பலவே”**

**- புறநானூறு.**

**மேற்கண்ட புறநானூற்றுப்பாடல் வரிகள் சமூகத்திற்கு உணர்த்தும் கருத்து யாது? விளக்கக் குறிப்பு எழுதவும்.**

**Ans.** அனைத்து மக்களின் தேவைகளும் ஒன்றுதான்

நம்மிடம் உள்ள செல்வத்தைப் பகிர்ந்தளித்து வாழவேண்டும்.

**Que.19. விடுபட்ட பகுதிகளை நிரப்புங்கள்.**

**எட்டுத்தொகை நூற்கள்**

**புறநானூறு**

**நற்றிணை**

**Ans.** நற்றிணை

குறுந்தொகை

ஐங்குறுநூறு

பதிற்றுப்பத்து

பரிபாடல்

கலித்தொகை

அகநானூறு

புறநானூறு

**Que.20. உமது பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் டிசம்பர் 11 – ஆம் தேதியில் நடைபெறும் பாரதியாரின் பிறந்தநாள் விழாவில் கவிஞர் மு.மேத்தா கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவைத் தலைமை ஆசிரியர் துவங்கி வைக்க உள்ளார். தமிழ் ஆசிரியர் வாழ்த்துரை வழங்கவுள்ளார். இவ்விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் தயார் செய்க.**

**Ans.** வடிவம் 1

அனைத்துத் தகவல்களும் உட்படுத்திய வரிசைமுறை 2

**Que.21. உத்தரவேதம்**

**தமிழ்மறை**

**திருக்குறள் தமிழ்மறை**

**தெய்வநூல்**

**பெரியபுராணம்**

**முப்பால்**

**மேற்குறிப்பிட்ட பெயர்களில் திருக்குறளின் வேறுபெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**Ans.** உத்தரவேதம், தமிழ்மறை, தெயவநூல், முப்பால்.

**Que.22. “அகனமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம்**

**புகலருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தனர் நுந்தை” மேற்குறிப்பிட்ட கம்பராமாயணப்பாடல் உணர்த்தும் மனிதநேயக் கருத்தைக் குறிப்பாக எழுதவும்.**

**Ans.** எங்களிடம் அன்புகொண்டு வந்த உள்ளத்திலே நிறைந்த அன்புடையவனே உன்னுடன் சேர்ந்து சகோதரர் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

**Que.23. பழந்தமிழ் இலக்கியத்தை………, ……… என இரு வகையாகப் பிரித்தனர்.**

**அ) கல்வி, தொழில் ஆ) வீரம், போர்**

**இ) அகம், புறம் ஈ) அறம், கொடை**

**Ans.** இ) அகம், புறம் .

**Que.24. மேற்குறிப்பிட்ட திருக்குறள் வரிகளுக்கு ஏற்ற விளக்கக்குறிப்பு எழுதுக.**

**Ans.** ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அஃது ஊரின் நடுவே உள்ள பயன்மிகுந்த மரம் பழுத்தாற் போன்றது.

**Que.25. தமிழ்த்தென்றல் என அழைக்கப்படுபவர்………………**

**Ans.** திரு.வி.கலியாணசுந்தரனார்.

**Que.26. கீழ்க்காணும் குறிப்புகளின் அடிப்படையில் 'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்க.**

**(காலத்திற்கேற்ற இலக்கியங்கள் – சமூகப்பிரதிபலிப்பு – இன்றைய நிலை)**

**Ans.** வடிவம் 1

கருத்துத்தொகுப்பு 2

மேற்கோள் பயன்பாடு 1

மொழிநடை 1

**Que.27. ஜனவரி 16 திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. பள்ளி தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெறும் இவ்விழாவிற்கு குழித்துறை எஸ்.ஜெபமணி என்னும் எழுத்தாளர் வருகை தர உள்ளார். இந்நிகழ்ச்சிக்கான அறிவிப்பு தயார் செய்யுங்கள்.**

**Ans.** வடிவம் 1

கருத்துத் தெளிவு 2

**Que.28. ஏற்றபடி இணைத்து எழுதுக.**

**அ) சிலப்பதிகாரம் - நாதகுத்தனார்**

**ஆ) மணிமேகலை - திருத்தக்கத்தேவர்**

**இ) குண்டலகேசி - சாத்தனார்**

**ஈ) சீவகசிந்தாமணி – இளங்கோடிவகள்**

**Ans. அ) இளங்கோவடிகள்**

**ஆ) சாத்தனார்**

**இ) நாதகுத்தனார்**

**ஈ) திருத்தக்கத்தேவர்**

**Que.29. புறநகர், முன்றில், சோணாடு, தஞ்சை மேற்குறிப்பிட்ட சொற்களில் மரூஉச் சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதி விளக்கம் தருக.**

**Ans.** சோணாடு, தஞ்சை 1

சோழநாடு, தஞ்சாவூர் எனும் சொற்கள் (மருவியது) விளக்கம் 2

**Que.30. உமது பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் கவியரங்கம் நடைபெறுகிறது. கவியரசு வைரமுத்து தலைமை தாங்கும் இந்நிகழச்சிக்கான வரவேற்புரை ஒன்று தயார் செய்யுங்கள்.**

**Ans.** வடிவம் 1

கவிஞர் அறிமுகம் 1

மொழிநடை 1

வரிசைப்படுத்துதல் 1

**Que.31. ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மைக் காப்பியம் என அழைக்கப்படுவது….**

**அ) வளையாபதி ஆ) சிலப்பதிகாரம்**

**இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி**

**Ans.** ஆ) சிலப்பதிகாரம்

**Que.32. ஏற்றபடி இணைத்து எழுதுக.**

**அ) பொன் - கடல்**

**ஆ) பவளம் - மலை**

**இ) முத்து - காட்டில்**

**ஈ) சந்தனம் - நிலம்.**

**Ans.** அ) நிலம்

ஆ) காட்டில்

இ) கடல்

ஈ) மலை

**Que.33. "படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசைவைத்த**

**பாண்டியர்கள் வளர்த்தமொழி, கடலின்நீரை**

**உடுத்திருக்கும் உலகத்தில் தலைமை தாங்கும்**

**உயர்ந்தமொழி."**

**மேற்குறிப்பிட்ட பாடல்வரிகளில் இடம்பெறும் தமிழ்மொழியின் பெருமைகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

**Ans.** பாண்டியர்கள் வளர்த்தமொழி

உலகமொழிகளில் பழமையானமொழி

உயர்ந்தமொழி...இதுபோன்றவை.

**Que.34. உவமைக்கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?**

**அ) சுரதா ஆ) கல்வி இ) சுஜாதா ஈ) புதுமைப்பித்தன்**

**Ans.** அ) சுரதா

**Que.35. பின்வரும் பாடல் வரிகளுக்கேற்ற கருத்தை விளக்கி நயம் பாராட்டி எழுதுக.**

**"......... வெளிநாட்டார் மொழிக்குச் சொற்கள்**

**கொடுத்திருக்கும் வள்ளல்மொழி; வன்மைமென்மை**

**கொண்டமொழி; குமரிமொழி; காப்பியங்கள்**

**வடித்திருக்கும் ஆதிமொழி; அறிவில் மூத்த**

**வள்ளுவனை ஈன்றமொழி தமிழேயாகும்."**

**- சுரதா.**

**Ans.** வடிவம் 1

மையக்கருத்து 1

சொல்நயம் 1½

பொருள்நயம் 1½

**Que.36. கீழ்க்காணும் குறிப்புகளின் அடிப்படையில் ‘தமிழ் மொழியின் பெருமைகள்’ என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.**

**(மொழியின் தனித்தன்மை, பழமை, சிறப்பு, இலக்கண, இலக்கிய வளம்)**

**Ans.** வடிவம் 1

கருத்துத்தொகுப்பு 2

மேற்கோள் 1

மொழிநடை 1

**Que.37. சிவபெருமானை வழிபடும் நெறி சைவம் எனப்படும். சிவனடியார்களை நாயன்மார்கள் என்று அழைப்பர். நாயன்மார்கள் அறுபத்துமூவர் ஆவர். இவர்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகள் என அழைக்கப்படுகின்றன.**

**கேரளத்தைச் சேர்ந்த நாயனார் சேரமான் பெருமாள் நாயனார். நாயன்மார்களில் ஒரே ஒரு பெண் காரைக்கால் அம்மையார் ஆவர்.**

**மேற்குறிப்பிட்ட பகுதியை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

**அ) நாயன்மார்களின் எண்ணிக்கையை எழுதுக.**

**ஆ) நாயன்மார்கள் பாடி நூலின் பெயர் எழுதவும்.**

**இ) இப்பகுதியில் இடம்பெறும் பெண்பாற் புலவரின் பெயர் எழுதுக.**

**Ans.** அ) நாயன்மார்கள் அறுபத்துமூவர் ஆவர்.

ஆ) பன்னிரு திருமுறைகள் எனஅழைக்கப்படுகின்றன.

இ) காரைக்கால் அம்மையார் ஆவார்.

**Que.38. ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன. அதற்கானக் காரணங்களைக் குறிப்பாக எழுதுக.**

**Ans.** சிலப்பதிகாரக் கதைத் தொடர்ச்சி மணிமேகலை.

மணிமேகலை கோவலன், மாதவியின் மகள்.

**Que.39. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்.**

**அ) திருக்குறள் - பத்துக்குறள்**

**ஆ) பாடல் - 133 அதிகாரம்**

**இ) அதிகாரம் - 1330 பாடல்கள்**

**ஈ) ஓர் அதிகாரம் – திருவள்ளுவர்**

**Ans.** அ) திருவள்ளுவர்

ஆ) 1330 பாடல்கள்

இ) 133 அதிகாரம்

ஈ) பத்துக்குறள்

**Que.40. எட்டுத்தொகை நூலில் ஒன்றான பதிற்றுப்பத்து ………...... அரசர்களைப் பற்றிப் பாடிய புறப்பொருள் நூலாகும்.**

**அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்.**

**Ans.** அ) சேரர்

**Que.41. ”நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்தபதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடகம் புறமென்று**

**இத்திறத்த எட்டுத்தொகை”**

**- பழம்பாடல்.**

**மேற்குறிப்பிட்ட பாடலில் இடம்பெறும் எட்டுத்தொகை நூற்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**Ans**. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**Que.42. “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்” என நம் தாய்மொழியாம் தமிழ் மொழியைப் பாடியவர்.**

**அ) பாரதிதாசன் ஆ) சுப்பிரமணிய பாரதியார்**

**இ) கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இ) இராமலிங்கம் பிள்ளை**

**Ans.** ஆ) சுப்பிரமணிய பாரதியார்

**Que.43. நம் தமிழ் மொழி இனிமையுடைய மொழி, இலக்கண வரம்புடைய மொழி செந்தமிழ்…………. என்ற அடைமொழிகளில் அழைக்கிறோம். நாம் அழைக்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.**

**Ans.** பைந்தமிழ், மென்றமிழ், இன்றமிழ், முத்தமிழ்.